European Tamil Conference - Paris
Coordinateur - Prof. S. Sachchithanantham
10,11- 10 - 2015

# ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு

## ஐரோப்பிய நாடுகளில் தமிழ் வளர்ச்சிப் போக்குகளும் தமிழ் கற்றலும் கற்பித்தலும்

# சிறப்பு மலர்

*Tamil in Europe Le tamoul en Europe Tamilisch in Europa Tamil enEuropa*
*Tamil Europassa Tamil in Europa Tamil i Europa*



அக்டோபர் 10 & 11, 2015 - பாரிசு
*OCTOBRE 10 & 11, 2015 - PARIS*

*70, Rue Philippe de Girard 75018 PARIS*
*Tel : 0953937694, 0652663001, 0609898657*

47

# தமிழ் மொழித் தொல்லியல் ஓலைச்சுவடி ஆய்வுகள் தென்கோயிற்புராணம் - ஓர் ஆய்வு

**ச.பத்மநாபன்**
விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை

தமிழ் மொழியின் இலக்கிய மரபில் ஓலைச் சுவடிகளும் தொல்லியல் மூலாதாரங்களாக விளங்குகின்றன. இலங்கையின் தோன்றிய புராண இலக்கிய மரபில் இலங்கையில் தோன்றிய சிவாலயங்கள் பற்றிய வரலாற்றைப் புராணமாகப் பாடப்பட்ட நூலே தென்கோயிற்புராணம் ஆகும். இப்புராணம் 12600 விருத்தப்பாக்களையுடையது. யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை வரகவி நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்களால் இயற்றப்பட்டது. பதிப்பிக்கப்படாது. ஓலைச்சுவடி வடிவமாக இருக்கும் இவ்விலக்கியத்தினைப் பற்றியதாகவே இவ்வாய்வு இடம்பெறுகின்றது. இலக்கியவிவரண ஆய்வு முறையினை ஆய்வு முறையியலாகக் கொண்டு இவ்வாய்வு விளங்குகின்றது.

திறவுச் சொற்கள் : தென்கோயிற்புராணம், புராணம், கோவில், சுவடி, ஓலைச்சுவடி, மான்மியம்

## அறிமுகம்

தமிழ்மொழி இலக்கியமரபில் திருக்கோவில்களின் வரலாறுகளைக் கூறும் வரலாற்று இலக்கியங்களாக 'புராணங்கள்' விளங்குகின்றன. தமிழ்மொழி இலக்கிய மரபில் புராணம் என வழங்கப்படும் இலக்கிய வடிவம் வடமொழி மரபிலிருந்து பெறப்பட்டது. புராணம் என்பது பற்றி வெண்பாப்பாட்டியல் கூறுகையில்

'குலவரவு காரிகை யாப்பிற் புராணமேயாம்' (செய்யுளியல் 43)

இங்கு சர்கம், பிரதிசர்கம், வம்சம், மன்வந்தரம், வம்சானுசரிதம் எனும் ஐந்திலக்கணமரமே வடமொழிப்புராண மரபாகும். அம்மரபில் புராணங்கள் மஹாபுராணம், உபபுராணம் எனப் பாகுபடும். இம்மரபில் தெய்வங்கள் பற்றிய இறையியல் வரலாறு, மூர்த்தி, தீர்த்தம், தலம், தோத்திரம், தியானம், தபம், விரதம், வேள்வி எனும் அம்சங்கள் இடம்பெறலாயின. இவ்விடயங்கள் பற்றிய வளர்ச்சித் தன்மை இவ் ஒவ்வோரம்சமும் புராணமாகும் மரபாயின. அவ்வகையில் சைவசமயம் சார்ந்த புராண இலக்கிய மரபில் திருக்கோயில் பற்றிய வரலாற்றை தெய்வீகவியல் மரபுடன் இணைந்த தன்மையில் எழுந்த புதியதோர் இலக்கிய வடிவமே "தல புராணங்கள்" ஆகும். இப்புராணங்கள் சிறப்பாக தமிழில் தென்னாட்டின் சைவக்கருவூலமாகத்திகழும் தன்மையில் திருக்கோயில் வரலாறுகள் ஸ்தலபுராணம் / தல மாஹாத்மியம் எனக் கூறும் தன்மைக்கு உயர்ந்த நிலையில்

போற்றப்படும் மரபையும் பெற்றன. அந்நிலையில், தென்னிந்தியாவிற்கு தெற்கேயான இலங்கையில் விளங்கும் ஆலயங்களின் வரலாற்றை தனித்துக் கூறுகின்றது. தொகுத்துக் கூறும் இலக்கியமாக விளங்குவதே 'தென்கோயிற்புராணம்' ஆகும். இது 'இலங்காமாஹாத்மியம்' என்றும் அழைக்கபடும். இத்தமிழ் மொழி இலக்கிய வடிவமே ஓலைச்சுவடி வடிவில் காணப்படும் புராண இலக்கியமாகும்.

## ஆசிரியர்

யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆட்சிசெய்த அரசகேசரி மரபின் பரநிரூபசிங்க அரசனின் மந்திரியாக இருந்தவர் மகேசஜயர் இவர் முன்னோர் தென்னிந்தியாவின் காஞ்சிபுரத்திலிருந்து கதிர்காமக்கந்தனை வழிபட வந்து யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் வசித்தவர்கள். அவர் மரபில் தமிழ் மொழிவல்லுனர் மரபில் நாகேசஜயர், கணபதி ஐயர் மரபில் நாகேசஜயர் விசாலாச்சி அம்பாளுக்கு குழந்தையாக 1848.07.31ல் பிறந்தார். காசியப கோத்திரத்தில் உதித்த இவர் பாரம்பரிய ஆயுள்வேத மற்றும் விஷக்கடி வைத்தியரும் சோதிடரும் ஆவார். இவரது சோதிட ஆசிரியர் அப்புக்குட்டி சாஸ்திரிகள் ஆவார்.

## ஆக்கங்கள்

ஈழத்து தமிழ் இலக்கியமரபில் மரபு வழிப்பண்டிதரும் நாவண்மை கொண்டதன் காரணாகவும் இவரை 'நா' வன்னா என அழைக்கும் மரபு உண்டு. இவர் வில்லியம் நெவின்ஸ் எனும் திரு.மு.சிதம்பரப்பிள்ளை என்பவரிடம் மரபுவழி தமிழ் இலக்கணம் கற்றார். அவ்வாறே தமது தந்தையாரிடம் ஆரியம், ஆங்கிலம் என்பவற்றிலும் புலமை பெற்றிருந்தார். இவர் பின்வரும் நூல்களை எழுதியுள்ளார்.

1. தென்கோயில்புராணம்
2. இரத்தின விலாசம் (நாடகம்)
3. கந்தசட்டிப்புராணம்
4. ருக்குமாங்கத விலாசம் (நாடகம்)
5. விநாயகசட்டிப்புராணம்
6. வலைவீசு விலாசம்
7. ஏகாதசிப்புராணம்
8. சுப்பிரமணிய தோத்திரவிருத்தம்
9. சிவமாலை
10. சிவராத்திரிப்புராணம்
11. திருக்கைக்கலியாணம்
12. குருநகர் பிள்ளை விடுதூது
13. வெள்ளிக்கிழமை விரத வினா விடை
14. ஸ்ரீகைலாசநாதர் புராணம்

என்பனவாகும். இவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடும் தென்கோயிற்புராணமே இவ்வாய்விற்குரிய நூலாகும்.

இவரது ஆக்கங்களுள் இரத்தினசூடவிலாசம், ருக்குமாங்கதவிலாசம், வலைவீசு விலாசம் என்பன நாடகங்கள் ஆகும்.

கந்த சட்டிப் புராணம், விநாயகசட்டிப்புராணம் ஏகாதசிபுராணம், சிவராத்திரிப்புராணம் ஸ்ரீகைலாசநாதர்புராணம் என்பனவற்றுள் விநாயக சட்டிப்புராணம் தவிர்ந்த ஏனையவை அச்சிடபடப்பட்டு வெளியிடப்பட்டவை ஆகும்.

சுப்பிரமணிய தோத்திரவிருத்தம், சிவமாலை, திருக்கைக்கலியாணம், குருநாதர் கிள்ளைவிருதூது, வெள்ளிக் கிழமை விரத வினாவிடை என்பனவும் அச்சிடப்பட்டவை ஆகும்.

இவற்றிற்கு மேலாக விராடநாடகம், இந்திரகுமார நாடகம் என்பனவற்றை திருத்திய இவர் பல்வேறு கோவில்களுக்கு ஊஞ்சற்பாக்களையும் பல்வேறு சாற்றுகவிகளையும், சரமகவிகள் பலவற்றையும் பாடியுள்ளார்.

வடமொழிச் சிவமஹாபுராணத்தை தமிழ் மொழி பெயர்க்க ஆரம்பித்து முற்றுப் பெற்றாது போனது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தென்கோயிற்புராணம்

'தென்கோயிற்புராணம்' என்பது 'இலங்கைமான்மியம்' எனும் இன்னோர் பெயரைக் கொண்டதோர் தமிழ்ப்புராணம் ஆகும். இப்புராணம் பனையோலைச் சுவடியாக கையெழுத்திருவில் இதுவரை வெளிவராத ஈழத்து தமிழ்ப்புராண இலக்கிய வரிசையில் ஒன்றாகும். இப்புராணத்தின் ஓலைச்சுவடி 50Cm x 3 Cm அளவில் 434 தனி பனையோலைச் சுவடிகளைக் கொண்டு நடுவில் இருதுளைகளுடன் இருபுறமும் மரத்தடிகள் பாதுகாப்பாக விளங்க கட்டப்பட்ட சுவடி நூல் ஆகும்.

இச்சுவடி இதுவரை பதிப்பிக்கப்படாது இருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்நூல் பற்றிய பார்வையும் குறிப்பும் காலத்திற்கு காலம் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதும் இங்கு மனம் கொள்ளத்தக்கது. இவ்வோலைச்சுவடியினை அழிந்து போகாது பாதுகாக்க வேண்டியது அவசியமாகின்றது.

தென்கோயிற்புராணத்தின் ஒரு பகுதியாக இடம்பெறும் 'முன்னேஸ்வர மான்மியம்'

எனும் பகுதி 401 விருத்தப்பாக்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய பாடல்கள் பதிப்பிக்கப்படாதிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தென்கோயிற்புராணத்தின் காப்புச் செய்யுள் அந்நூலின் அமைப்புப் பற்றிய முழுவிபரத்தையும் தெரிவிப்பதாக காணப்படுகின்றது.

"பன்னிய காண்டமைந்து படலமோர் முப்பதின்மே
லொன்றும்பன் னீராயிரத்து னறுநூறு விருத்தச்செய்யுள்
தன்னிற் சீரிலங்கா மான்மியஞ் தழைதென்
கோயிற்புராணங்
கன்னிகை யருளுமங்கைக் கற்பகம் கருதிச்
சொல்வோம்"

எனும் பாடலினூடாக மூன்று காண்டங்களையும் முற்பத்தொரு படங்களையும் 12600 விருத்தப்பாக்களையும் உடையதாக காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது. வடமுனைக்காண்டம், தென்முனைக்காண்டம் எனும் இருபெரும் பகுதிகளுள் ஏனைய விடயபரப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது.

நூற்பயனாக குறிப்பிடப்படும் செய்யுளில்,

"திருவுங் கல்வியுஞ் திகழ் நீதியன்
அவன்வரு முத்தியு மணுகுஞ் சிற்பரம்
பொருவரும் தெக்கி ணாலய புராணமே
லொருகவி யாயினு மோர்ந்து ரைக்கினே"

எனக் குறிப்பிடுகையில் இம்புராணத்தின் இன்னுமொரு பெயராக 'தெக்கிணாலய புராணம்' என்பதனைக் சுட்டுகின்றார். கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து தனது குல தெய்வமாகிய கண்ணலிங்கேசரையும் கண்ண காம்பிகையையும் திருத்தொண்டரையும் தொழுகின்றார்.

அவையடக்கடக்கத்தில் வியாசமா முனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்கு எவ்விதம் வடமொழியில் புராணம் நல்கினாரோ அதேபோல் நான் இலங்கையின் கதையினை தென் மொழியில் பாடுவதாகச் சுட்டுகின்றார். பாயிரத்தில் இலங்கையின் மேன்மையினையும் தாம் கூற விளையும் புராணத்தின் மேன்மையினையும் கூறுவது மனம் கொள்ளத்தக்கது.

இத்தகைய புராணத்தை தாமே இவற்றியது
என்பதற்குரிய சாற்றுகவியாக
விந்தை செறி வட்டுநகர் வேதியனா கேசபுந்தி
மைந்தன்சிவ சுப்பிரமண்யகுரு - தந்ததமிழ்
தென்கோயின் மான்மியச்சீர்ச் செப்பு புராணஞ்சிவமே
என்கோ அமுதென்கோ யான்."

என்று கூறுவதும் இதனூடாக இந்நூலுக்கு 'தென்கோயில் மான்மியம்' எனும் பெயரைச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

இலங்கையின் தமிழ் இலக்கியமரபில் புராணங்கள் தனித்துவம் பெறுகின்றன. 19-ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியிலும் தமிழ் இலக்கிய மரபிற்கு சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் காத்திரமான பங்களிப்பு மேற்கொண்டுள்ளார். அத்தகைய பங்களிப்புக்களுள் கந்தசஷ்டி புராணத்தையும், ஸ்ரீகைலாசநாதபுராணத்தையும் தவிர்ந்த ஏனைய புராணங்கள் கிடைக்காது போயுள்ளன. நாடகங்கள் பதிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் பனையோலைச்சுவடி வடிவிலிருக்கும் இப்பேரிலக்கியம் இலங்கையின் இந்து சமய வரலாறு கூறும் ஓர் காப்பியமாக விளங்குவதும் அதனை அழியாது பாதுகாக்க வேண்டியதும் எனது தலையாய கடமையாகும்.

❖ ❖ ❖